முருகப்பெருமான் துணை

**மகான் நம்மாழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.11.2023**, வியாழக்கிழமை

1. ஞானகுருவே அரங்கா வாழ்க
ஞானிகள் பலம் கொண்ட தேசிகா
வானவர் போற்றும் வள்ளலே வாழ்க
வரம் தரும் ஆறுமுக அரங்கா
2. அரங்கனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் அறிவுரை ஆசி
வரங்களென சோபகிருது தேள் திங்கள்
வல்லமைபட சப்தம திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 07 ம் நாள், 23.11.2023, வியாழக்கிழமை)
3. வாரமதில் நம்மாழ்வார் யானும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரமிலா ஞானவான்கள் தன்னை
சுத்தநெறி கொண்டு அரங்கன் படைக்க
4. படைக்கவே ஞானசபை அமைத்து
பண்பான சமூகம் அமைய
தடையற சுத்த சைவ நெறியை
தனிப்பெருங் கருணை வடிவாக
5. ஆகவே அரங்கன் அருளிவர
அரங்கமகானை தேடிவந்து
வகைபட பிரணவக் குடிலில்
வணங்கியே தீட்சை ஏற்று
6. ஏற்றுமே சன்மார்க்க வழியே
எல்லா பக்குவமும் தரும் வழியே
உற்றதொரு சாத்வீகம் தயவான
உயர்குணமும் தரும் வழியென

7. வழியென மக்கள் ஏற்று வர
வருங்காலம் வினை நீக்கமுடன்
அழிவிலா வாழ்வு பாதுகாப்பு
அனைத்தும் தருகின்ற மாற்றமாக
8. ஆகவே சக்தி கூடியே
அரங்கமகான் தேற்றம் வழி
வகைபட மகான்களாகியே
வரும் காலம் மாற்றும் வண்ணம்
9. வண்ணமுடன் சிறப்பு காண்பர்
வையகம் தரும பலம் கூடிட
அன்னதான சேவையும் விரிந்து
அறிவிப்பேன் தருமலோகமாகும்
10. ஆகவே இந்தநிலை கூடிட
அறிவிப்பேன் உலகம் சகஜநிலை
மகான் அரங்கன் நோக்கமாக
மாதன புழக்கங்கள் கூடி
11. கூடியே தனவான் தருமவான்களாய்
குவலயம் அரங்கனால் மாறி
தேடியே ஞானவான்கள் ஆட்சி
தெய்வபலமிக்க ஞான ஆட்சி காலமாகும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–